# இலங்கை இந்திய பாலம் அமைக்கப்பட்டிருந்தால் ஈழத்தமிழர் துன்புற்றிருக்கமாட்டார்

## கருணாநிதி பிறந்ததின விழாவில் கி. ஆ. பெ. விசுவநாதம்

சென்னை, ஜூன் 13

''தமிழாய்ந்த தமிழ்மகன் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வரவேண்டும் என்று பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அண்ணா முதலமைச்சராக இருந்த போதும் கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்த போதும் புரட்சிக் கவிஞரின் கூற்று பலித்தது.

இவ்வாறு கலைஞர் மு. கருணாநிதியின் 55வது பிறந்த தின விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் குறிப்பிட்டார்.

இவ்விழா சென்னை கலைவாணர் இலக்கிய அரங்கில் கொண்டாடப்பட்டது.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

**பாரதிகண்ட கனவு பலித்திருக்குமானால்...**

பாரதிகண்ட கனவுகள் எல்லாம் பலித்துவிட்டன. ஆனால் ''சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம்'' என்று சொன்னது பலிக்கவில்லை. பாரதி சொன்னதுபோல் பாலம் அமைந்திருக்குமானால் இலங்கையிலுள்ள தமிழர்கள் தொந்தரவுபட நேர்ந்திருக்காது. பாரதிபோல் பாரதிதாசனும் கனவுகண்டார். தமிழாய்ந்த தமிழ்மகன்தான் தமிழ்நாட்டில் முதலமைச்சராக வரவேண்டும் என்ற அவரின் கூற்று மீண்டும் கலைஞருக்கு 60 வயதில் பலிதமாகும் என்பது எமது நம்பிக்கை.

கலைஞர் தமக்கு பிறந்ததின விழா எடுத்த சகலரையும் வாழ்த்தும்போது நான் அல்ல கழகம். நாம் தான் கழகம் என்பதை மறக்கக்கூடாதுஎன்றார்.

விழாவில் பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (செ)

---

கலைஞர் பிறந்ததினம்:

## தி. மு. க.வுக்கு ரூ. 50,000 வசூல்

சென்னை, ஜூன் 13

கலைஞர் மு கருணாநிதியின் 55வது பிறந்ததினத்தை யொட்டி அவரின் இல்லத்துக்கு வருகைதந்து வாழ்த்து வழங்கிய தொண்டர்கள் அன்றைய தினம் மட்டும் கழகநிதியாக ரூபா, 50,197.00 வழங்கியுள்ளனர்.

இதைவிட அன்றையதினம், தமிழகமெங்கும் இலவச இரத்ததானம், ஏழை எளியவர்க்கு ஆடைதானம் குழந்தைகளுக்கு இனிப்பு ஊனமுற்றவர்க்கு அன்னதானமும் வழங்கப்பட்டன. (செ-இ)

---

## இந்திரா மீது ஜனதா கட்சியினர் தாக்கவில்லை

புதுடில்லி, ஜூன் 13

புவனேஸ்வரிலும் கட்டாக்கிலும் திருமதி இந்திராகாந்தி சென்ற கார்மீது தாக்குதல் நடத்திய கூட்டத்தில் ஜனதாக் கட்சியினர் ஈடுபடவில்லை என்று ஜனதாகட்சிப் பொதுச் செயலாளர் திரு. நானாஜி தேஷ்முக் தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் இச்சம்பவங்கள் தொடர்பாக இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

---

## மலேஷியாவில் ஜூலை 8ல் பொதுத்தேர்தல்

கோலாலம்பூர், ஜூன் 13

மலேஷியாவில் அடுத்த மாதம் 8ம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறும் என்று பிரதம தேர்தல் கமிஷனர் அறிவித்துள்ளார்.

மலேஷியாவின் மத்திய சமஷ்டி அரசுக்கும் 10 மாநில அரசுகளுக்குமே தேர்தல் நடைபெறவுள்ளது. (இ)

---

# காங்கிரஸ் வழியிலேயே ஜனதா அரசும் செல்கிறது

## ஜெயப்பிரகாஷர் கண்டனம்

பாட்னா, ஜூன் 13

முன்பு ஆட்சிப் பொறுப்பிலிருந்த காங்கிரஸ்கட்சி சென்ற அதேவழியில் ஜனதா அரசும் செல்கிறது. ஜனதா அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து வருகிறார்கள். மக்கள் எதிர்பார்த்த அளவு ஜனதா அரசு சிறப்பாக செயல்படமுடியவில்லை.

இவ்வாறு சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் மாணவர் போராட்ட அணி புரட்சிதின விழாவிற்கு அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இந்தியாவில் அடக்குமுறை ஆட்சி ஆரம்பிக்கப்பட்டவுடனேயே இந்த அணி என்னால் தோற்றுவிக்கப்பட்டது. உடல் நலக்குறைவினால் நான் இந்த அணிக்கு தலைமைதாங்கி நடாத்தமுடியாமல் போய்விட்டது. ஆனால் வழிகாட்டியாக இயங்கினேன்.

திருமதி இந்திராகாந்தியின் ஆட்சி கலைக்கப்பட்டதுடன், புரட்சியும் பகுதிக்கு பயணம் நின்றுவிட்டது. ஆனால் நாடாளுமன்றத்திலும், சட்ட சபையிலும் இருக்கும் சிலர் அரசு தவறுவிடும் பட்சத்தில் இப் புரட்சியை செய்வார்களென நம்பினேன். அவர்கள் தவறவிட்டுவிட்டார்கள்.

பெரும்பான்மை மக்கள் வாழ்கின்ற கிராம சமுதாயம் சாதிஉணர்வினாலும், மூடநம்பிக்கைகளாலும் அழுத்தப்பட்டு கிடக்கிறது இதை அகற்ற கிராமங்களில்தான் முழுப் புரட்சி தொடக்கப்படவேண்டும். இளைஞர்களும் பொதுமக்களும் அடங்கிய நல்ல கட்டுக்கோப்பான அமைப்பின் மூலம் முழுப் புரட்சியையும் நாம் அடையலாமென்றும் திரு. நாராயண் கூறியுள்ளார். (செ-இ)

---

## பதிவாளர் இல்லை

(யாழ்ப்பாணம்)

நயினாதீவில் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் ஒருவர் நியமிக்கப்படாமையினால் மக்கள் பெரிதும் கஷ்டமடைந்து வருகின்றனர். முன்னர் சேவையில் இருந்த பதிவாளர் ஓய்வு பெற்றதை அடுத்து இப்பதவி காலியாகவுள்ளது.

நயினாதீவு கிராமசபைப் பகுதியில் கிராமசேவகர் பதவியும் காலியாகவுள்ளது. இப்பதவிக்கும் எவரும் நியமிக்கப்படவில்லை. (செ—இ)

---


அறிமுகப்படுத்துகிறோம். புதிய

# ஹெடோனல் எம் 60%

60% எம். சி. பீ. ஏ. ஏமீன் உப்பு அடங்கிய களை கொல்லி.




நெல் வயலில் வளரும்
சந்தனக் கோரை. சிரு கோரை
நீர் கோவா மற்றும்
எல்லா களைகளையும் அழிக்கும்.

பயிர்களையும் பண லாபத்தையும் பாதுகாக்கப் பாவியுங்கள்.

அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் பேயர் விவசாய ரசாயனப் பொருட்கள்.

மூலப் பொருட்சத்து உத்பத்தியாளர் :
பேயர் ஜெர்மனி.

BAYER

இலங்கையில் தயாரிப்போர் :
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.


---

இந்தியாவில் மீண்டும்

## எதேச்சாதிகார ஆட்சி மீண்டும் ஏற்படாது

### அமெரிக்காவில் மொரார்ஜி

நியூயோர்க், ஜூன் 13

முன்னாள் இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி பதவியிலிருந்தபோது நிலவி வந்த எதேச்சாதிகார ஆட்சி இந்தியாவில் மீண்டும் ஏற்படமாட்டாது என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் நியூயோர்க்கில் தெரிவித்தார்.

டெலிவிஷனுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே திரு. தேசாய் மேற்கண்டவாறு கூறினார்.

தேர்தல் மூலம் திருமதி காந்தி மீண்டும் பதவிக்கு வந்தாலும் முன்னர்போல் ஆவரால் ஆட்சி செலுத்தமுடியாது என்றும் அவர் கூறினார்.

ரஷ்யாவும் அமெரிக்காவும் அணுகுண்டு சோதனைகளை வெகுவாகக் குறைக்கவேண்டும் என்றும் திரு. தேசாய் இந்த இரு நாடுகளையும் கேட்டுக்கொண்டார். (இ)

---

சர்வதேச நாடுகளின்

## உதைபந்தாட்டத் திடலாக ஆபிரிக்கா இருக்கக்கூடாது

### கௌண்டா எச்சரிக்கை

லுசாக்கா, ஜூன் 13

ஆபிரிக்காக் கண்டம் சர்வதேச நாடுகளின் உதைபந்தாட்டத் திடலாக மாறி வருவதைத் தடுக்க ஆபிரிக்க நாடுகள் விழிப்புடன் செயலாற்றவேண்டும்.

இவ்வாறு ஸாம்பியா அதிபர் கெனத் கௌண்டா லுஸாக்காவில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் பேசுகையில் எச்சரிக்கை விடுத்தார்.

சர்வதேச நாடுகளின் ஆயுதப் போட்டிகளுக்கும் சித்தாந்தப் போட்டிகளுக்கும் ஆபிரிக்க நாடுகள் களம் அமைத்துக் கொடுக்கும் நிலையை நாம் என்றுமே அனுமதிக்கக் கூடாது என்றும் அவர் கூறினார். (இ)

---

## இன்று

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி பெருமாள் கடவைப் பிள்ளையார் கோவில் 4-ம் திருவிழா உற்சவமான இன்றிரவு 8 மணிக்கு ''சிவத்தமிழ்ச் செல்வி'' தங்கம்மா அப்பாக்குட்டி ''ஞானக் குழந்தை'' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார். (உ)

